# DEPOSITION OF WITNESS

# IN THE COURT OF JM.No.II, DHARMAPURI.

## PROSECUTION OF WITNESS

## CC.No. 60/2026

| | | | |
|---|---|---|---|
| NAME | :சின்னபையன் | CALLING | : |
| FATHER'S NAME | : | RELIGION | : |
| VILLAGE | : | AGE | : |
| TALUK | : | DATE | : **11.08.2026** |

(Oath shall be affirmed as per the provisions of The Oaths Act, 1969) (Act 44 of 1969)

**Accused present.**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**PW– 5 : திரு.** சின்னபையன் **த/பெ குழந்தைகவுண்டர்**

**முதல் விசாரணை**

நான் நேருநகரில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 3 ஒப்புதல் வாக்குமூலங்கள் மற்றும் 6 கைப்பற்றுதல் மகஜர்களில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது. கடந்த 10 மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் திருடு போனது சம்மந்தமாக ஈரோட்டுக்கு காவல் துறையினர் சென்று பொருட்களை கைப்பற்றி வந்ததாக கூறினர். 1 ஆம் எதிரி மற்றும் 2 ஆம் எதிரி இருவரும் ஆளுக்கொரு காரில் வெள்ளை மற்றும் சிவப்பு கலர் காரில் ஈரோடு அருகே வந்த போது போலிசார் துரத்தி சென்று பிடித்தார்கள். அப்போது அவர்கள் போலிசாரிடம் வாக்குமூலம் அளித்தார்கள். அப்போது அவர்கள் சோமனள்ளியில் ஒரு வீட்டின் பூட்டை உடைத்து நகை மற்றும் பணம், வெள்ளி கொழுசுகளை திருடியதாக 1 மற்றும் 2 எதிரிகள் எங்கள் முன்னிலையில் நானும் அ.சா.4 சுரேஷ் இருந்தபோது குற்றத்தை ஒப்புக்கொண்டார்கள். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 1 மற்றும் 2 எதிரிகளிடமிருந்து சுமார் 50 பவுனுக்கு மேற்பட்ட எடையுள்ள தங்க கட்டிகளையும், வெள்ளி கொழுசுகள் நிறைய இருந்தன. வெள்ளி பொருட்கள், பணம் 30 லட்சமும்இ வெள்ளை நிற மற்றும் சிவப்பு நிற கார் 2 ஆகியவற்றை என்முன்னிலையில் கைபப்ற்றுதல் மகஜர் மூலமாக போலிசார் கைப்பற்றினர். ஒப்புதல் வாக்குமூலங்கள் மற்றும் கைபப்ற்றுதல் மகஜர்கள் ஏற்கனவே அ.த.ச.ஆ.2 முதல் 10 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இது சம்பவம் குறித்து போலிசர் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை –**

இந்த வழக்கு சம்மந்தமாக நான் தருமபுரி மாவட்டத்தை விட்டு வேறு மாவட்டத்திற்கு செல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகளை எங்கு வைத்து கைது செய்தார்கள், எங்கு வைத்து விசாரணை செய்தார்கள் என்பது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் நான் அவ்வாறு தான் கூறினேன் என்றால் சரிதான். சான்று பொருட்கள் எங்கு உருக்கினார்கள், எங்கிருந்து காவல் நிலையத்திற்கு எடுத்து வந்தார்கள், எங்கு கைப்பற்றப்பட்டது என்பது நேரடியாக

எனக்கு தெரியாது என்றால் சரிதான். இண்டுர் காவல் நிலையத்தில் வைத்து தான் ஒப்புதல் வாக்குமூலங்கள் மற்றும் கைபற்றுதல் மகஜர்களில் கையொப்பம் இட்டேன் என்றால் சரிதான். எனக்கு எழுத படிக்க தெரியாது என்றால் சரிதான். நான் கையெழுத்திட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். சுரேஷ் ஏற்கனவே, மேற்படி கைப்பற்றுதல் மகஜர் மற்றும் ஒப்புதல் வாக்குமூலங்களில் கையொப்பம் இட்டிருந்தார். நான் பிறகு காவல்நிலையத்தில் கையொப்பம் செய்தேன். அந்த கையொப்பம் சுரேஷ் தான் போட்டார் என்று எனக்கு தெரியாது என்றால் சுரேஷ் போட்டதாக தான் என்னிடம் கூறினார்கள். என் முன்னிலையில் போலிசார் எதிரிகளை விசாரித்தனர். போலிசார் இவ்வழக்கில் தொடர்பில்லாத எதிரிகளை தொடர்பு படுத்தி குற்ற சம்பவத்தில் ஈடுபட்டதாக கூறி வேறு ஒருவரிடமிருந்து கைபற்றிய வழக்கு சொத்துகளை எதிரிகளிடமிருந்து கைபற்றியதாக வழக்கு ஆவணங்களை ஜோடித்துள்ளார்கள் என்றாலும் அதில் நான் அதற்கு ஆதரவாக சாட்சி கையெழுதிட்டு போலிசாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் என்முன்னிலையில் எதிரிகளிடம் எந்த விசாரணையும் மேற்கொள்ளவில்லை என்றால் சரியல்ல.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.08.11 17:04:13 +0530

# <u>DEPOSITION OF WITNESS</u>

## <u>IN THE COURT OF JM.No.II, DHARMAPURI.</u>

## PROSECUTION OF WITNESS

## CC.No. 60/2026

| | | | |
|---|---|---|---|
| NAME | :சுரேஷ் | CALLING | : |
| FATHER'S NAME | : | RELIGION | : |
| VILLAGE | : | AGE | : |
| TALUK | : | DATE | : **11.08.2026** |

(Oath shall be affirmed as per the provisions of The Oaths Act, 1969) (Act 44 of 1969)

**Accused present.**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**PW– 4 : திரு. சுரேஷ் த/பெ தேவராஜ்**

**<u>முதல் விசாரணை</u>**

நான் பேடரள்ளியில் குடியிருந்து கான்ட்ரக்டராக தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 3 ஒப்புதல் வாக்குமூலங்கள் மற்றும் 6 கைப்பற்றுதல் மகஜர்களில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது. கடந்த 10 மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் திருடு போனது சம்மந்தமாக ஈரோட்டுக்கு காவல் துறையினர் என்னை அழைத்து சென்றனர். 1 ஆம் எதிரி மற்றும் 2ஆம் எதிரி இருவரும் ஆளுக்கொரு காரில் வெள்ளை மற்றும் சிவப்பு கலர் காரில் ஈரோடு அருகே வந்த போது போலிசார் துரத்தி சென்று பிடித்தார்கள். அப்போது அவர்கள் போலிசாரிடம் வாக்குமூலம் அளித்தார்கள். அப்போது அவர்கள் சோமனள்ளியில் ஒரு வீட்டின் பூட்டை உடைத்து நகை மற்றும் பணம், வெள்ளி கொழுசுகளை திருடியதாக 1 மற்றும் 2 எதிரிகள் எங்கள் முன்னிலையில் நானும் சாட்சி 9 சின்னபையனும் இருந்தபோது குற்றத்தை ஒப்புக்கொண்டார்கள். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 1 மற்றும் 2 எதிரிகளிடமிருந்து சுமார் 400 கிராம் எடையுள்ள தங்க கட்டிகளையும், வெள்ளி கொழுசுகள் நிறைய இருந்தன. வெள்ளி தட்டுகள், பணம் ரூ,.29, 18000/– ரொக்கமும், பூட்டுகள், சுத்தி, கட்டிங்பிளேடு, உலி ஆகியவற்றை என்முன்னிலையில் கைபற்றுதல் மகஜர் மூலமாக போலிசார் கைப்பற்றினர். நீதிமன்றத்தில் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள மொத்தம் 6 செட் கொழுசுகள் மற்றும் 4 தங்க கட்டிகள் தான் 1 மற்றும் 2 எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டது. அதில் 4 தங்க கட்டிகள் மற்றும் 4 செட் கொழுசுகள் ஏற்கனவே நீதிமன்றத்தில் சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. நீதிமன்றத்தில் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள மொத்த கொழுசுகள் 6( மீதமுள்ள 2 செட் கொழுசுகள்) மற்றும் 2 செட் தோடு, ஒரு மோதிரம், 4 தங்க கட்டிகள் (தங்க கட்டிகள் மட்டும் சா.பொ.1 ல் குறியீடு செய்யப்பட்டது) **சான்று பொருள் சா.பொ.2 ஆகவும், நீதிமன்றத்தில் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நெம்பர் பிளேட் இல்லாத வெள்ளை நிற கார் சா.பொ.3 ஆகவும், மற்றும் நெம்பர் பிளேட் இல்லாத சிவப்பு நிற கார் சா.பொ. 4 ஆகவும், நீதிமன்றத்தில் காட்டப்படும் சில்வர் கலர்**

இரண்டு பூட்டுகள் சா.பொ.5 ஆகவும், நீதிமன்றத்தில் காட்டப்படும் கிரே கலர் மற்றும் புளூ கலர் உடைய இரண்டு செல்போன்கள் சா.பொ. 6 ஆகவும், நீதிமன்றத்தில் காட்டப்படும் சுத்தி சா.பொ.7 ஆகவும், நீதிமன்றத்தில் காட்டப்படும் கட்டிங்பிளேடு சா.பொ. 8 ஆகவும், நீதிமன்றத்தில் காட்டப்படும் உலி சா.பொ.9 ஆகவும், நீதிமன்றத்தில் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள பணங்கள் பணம் ரூ..29,18,000/ சா.பொ. 10 ஆகவும், நீதிமன்றத்தில் காட்டப்படும் பூட்டை உடைப்பதற்கு பயன்படும் மஞ்சள் கலர் கட்டர் சா.பொ. 11 ஆகவும், குறியீடு செய்யப்படுகிறது. 1–ஆம் எதிரி தமிழ்செல்வனின் ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ.2 ஆகவும், 2–ஆம் எதிரி வெங்கடேசன் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ.3 ஆகவும், 3–ஆம் எதிரி வெங்கடேசன் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ.4 ஆகவும், 07.11.2025 ஆம் வருடம் கைப்பற்றிய கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ.5 ஆகவும், 08.11.2025 ஆம் வருடம் கைப்பற்றிய கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ.6 ஆகவும், 08.11.2025 ஆம் வருடம் கைப்பற்றிய கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ.7 ஆகவும், 07.11.2025 ஆம் வருடம் கைப்பற்றிய கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ. 8 ஆகவும், 07.11.2025 ஆம் வருடம் கைப்பற்றிய கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ. 9 ஆகவும், 26.10.2025 ஆம் வருடம் கைப்பற்றிய கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ. 10 ஆகவும், குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக போலிசர் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை</u> – எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை செய்ய முன்வரவில்லை.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.08.11 17:04:19 +0530